இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 05-08-2025

# நலம் காக்கும் நல் முதலமைச்சர்

தமிழ்நாட்டின் அனைத்து மக்களின் நலம் காக்கும் நல் முதலமைச்சராக செயல்பட்டு வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**அனைத்துத் துறைகளும் தங்களது துறையின் சார்பில் பல்வேறு மகத்தான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன. இவை அனைத்தும் சேர்ந்து தமிழ்நாட்டை உன்னதமான இடத்துக்கு உயர்த்தி வருகிறது. அதில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் பங்கு மிகமிக முக்கியமானது ஆகும்.**

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தி, அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி கிடைப்பதை உறுதி செய்தது இந்தத் துறையின் மகத்தான சாதனை ஆகும். மக்களைத் தேடி மருத்துவம் - இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 - பாதம் பாதுகாப்போம் - இதயம் காப்போம் - சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம் - மக்களைத் தேடி ஆய்வக சேவைகள் - நடப்போம் நலம் பெறுவோம் திட்டம், வணிகர்களைத் தேடி மருத்துவத் திட்டம் - தொழிலாளர்களைத் தேடி மருத்துவம் - முதல்வர் மருந்தகம் என்ற வரிசையில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்ற மருத்துவ முகாம்களை இத்துறை தொடங்கி இருக்கிறது. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் நேற்றைய தினம் (02.08.2025) தொடங்கி வைத்துள்ளார்கள்.

38 மாவட்டங்களில் 1,256 முகாம்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் நடைபெறுகிறது. சமூகப் பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களது நன்மைக்காக இவை அமைக்கப்பட்டுள்ளன. E.C.G, எக்கோ, X-Ray, ஸ்கேன், காசநோய் மற்றும் தொழுநோய் பரிசோதனைகள், பெண்களுக்கான கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பகப்புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும் செய்யப்பட இருக்கிறது. இது தொடர்பான மருத்துவ அறிக்கை, அனைவருக்கும் தரப்பட இருக்கிறது. ஆகஸ்ட் 2 ஆம் தேதி மட்டும் தமிழ்நாடு முழுவதும் சுமார் 50 ஆயிரம் பேர் இந்த முகாமுக்கு வந்து பயனடைந்திருக்கிறார்கள்.

**இந்த முகாமில் பயனடைந்த மக்கள் ஊடகங்களில் அளித்து வரும் பேட்டிகள், இதன் பயன்பாட்டை உறுதி செய்துள்ளது.**

பெண்கள், ஏழை எளியோர், மாற்றுத்திறனாளிகள், வயதானவர்கள் என அனைவரும் மகிழ்ச்சி மனநிலையோடு பேட்டிகள் கொடுத்து வருகிறார்கள். "வரும் போது அனாதை போல வந்தேன். இப்ப திருப்தியோடு போறேன். பொதுவா ஒரு இடத்துக்கு போனா, 'அந்தப் பக்கமா போங்க' என்று சொல்லி விடுவார்கள். ஆனா இங்க வந்ததும் ஒவ்வொரு இடத்துக்கா கூட்டிட்டு போனாங்க. கண் பரிசோதனை செய்தேன். முதலமைச்சரையும் பார்த்தேன். கை கொடுத்து பேசிட்டு இருந்தாரு. இதெல்லாம் எனக்கு கிடைச்சிருக்கு... சந்தோஷமா வீட்டுக்கு போறேன்" என்கிறார் மயிலாப்பூரைச் சேர்ந்த கவுசியம்.

★ சென்னை கிண்டியைச் சேர்ந்த திருவேங்கடம் என்பவர், "மெரினா கடற்கரை மணல் பரப்பு சிறுகடை வியாபாரிகள் சங்க உறுப்பினராக நான் இருக்கிறேன். இந்த முகாம் சிறப்பாக உள்ளது. அனைத்துப் பரிசோதனைகளையும் சிறப்பாக செய்தார்கள். கண், பல், ரத்தப் பரிசோதனை செய்தனர். அனைத்து சோதனையும் ஒரே இடத்தில் செய்தனர். அனைத்து மருத்துவர்களும் ஒரே இடத்தில் இருந்தனர். இந்த முகாம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது" என்று சொல்லி இருக்கிறார்.


- ★ கொளத்தூரைச் சேர்ந்த கணேஷ் பாபு, "திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாக உள்ளது, ஒரு மணி நேரத்தில் அனைத்து சோதனைகளும் முடிந்துவிட்டது, வெளியே சென்று இந்தச் சோதனைகளை செய்தால் பல ஆயிரம் ரூபாய் செலவாகும். ஆனால் இலவசமாக இன்று பரிசோதனை செய்தோம்" என்று சொல்லி இருக்கிறார்.
- ★ சாந்தோமைச் சேர்ந்த ராதா என்பவர், "எங்களைப் போன்ற நடுத்தர மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது" என்றார்.
- ★ மயிலாப்பூரைச் சேர்ந்த சொர்ணாம்பிகா, "நான் கர்ப்பமாக உள்ளேன். ரத்தப் பரிசோதனை செய்தேன். செலவில்லாமல் மிக விரைவாக பரிசோதனை செய்து கொண்டேன்" என்கிறார்.
- ★ மயிலாப்பூரைச் சேர்ந்த பவுசியா பேபி, " பத்து பைசா செலவு இல்லாமல் எனக்கு பரிசோதனை செய்தனர். ரத்தப் பரிசோதனை, கண் பரிசோதனை எடுத்தனர். அனைத்தும் நன்றாக உள்ளது, இந்தத் திட்டம் செயல்படுத்தியது எங்களைப் போன்றவர்களுக்கு மிகப்பெரிய வாய்ப்பாக உள்ளது. என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல ஆளில்லை. ஆனால் இங்கு சிறப்பாக கவனித்தார்கள்" என்று சொல்கிறார்.
- ★ "எனக்கு இன்று செய்த பரிசோதனைகளை வெளியே சென்று செய்தால் 4000 ஆயிரம் ரூபாய் ஆகும். ஆனால் இங்கு அனைத்தும் இலவசம்" என்கிறார் ஐஸ் ஹவுஸ் பகுதியைச் சேர்ந்த யாஸ்மின்.

இவைதான் முதலமைச்சருக்கு கிடைத்துள்ள நற்சாட்சிப் பத்திரங்கள் ஆகும்.

**"என்னைப் பொறுத்தவரைக்கும், ஒரு திட்டத்தை கொண்டுவருகிறோம் என்றால், அது ஒவ்வொரு தனிமனிதரையும் சென்றடைய வேண்டும். ஒரே ஒருவர் கூட விடுபட்டுவிடக் கூடாது. அதில் நான் மிகவும் கவனமாக இருக்கிறேன். அதனால்தான் உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின் போன்ற திட்டங்கள் மூலமாக, ஒவ்வொருவரின் தேவையையும் புரிந்து கொண்டு அவர்களுடைய எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம்" என்று மாண்புமிகு முதல்வர் சொன்னதையும் - மக்கள் அளித்து வரும் பேட்டிகளையும் ஒப்பிட்டுப்பார்த்தால் மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ, அதை நடைமுறைப்படுத்தும் முதலமைச்சராக மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருவதை உணரலாம்.**

உயர்தரமான மருத்துவச் சேவைகளை வழங்குவதில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முன்மாதிரி மாநிலமாக விளங்கி வருகிறது. அனைவரையும் நலமுடன் வாழ வைப்பதிலும் தமிழ்நாடு முன் மாதிரி மாநிலமாக முன்னேறி வருவதை உறுதி செய்துள்ளார் நல் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

●●



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும். நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள், தியாகி தீரன் சின்னமலையின் நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள அலுவலகத்தில் இருக்கும் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். அருகில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி. மாநகராட்சி மேயர் அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் விஜயா ஜெயராஜ், பொருளாளர் துரைராஜ், குடமுருட்டி சேகர், தொ.மு.ச. அமைப்பாளர் குணசேகர் மற்றும் கழக நிர்வாகிகள் மூவேந்தரன், கலைச்செல்வி, கவிதா புஷ்பராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மண் காக்க, மக்கள் மானம் காக்க உயிர் நீத்த

# தீரன் சின்னமலை நினைவைப் போற்றுவோம்!

**சென்னை, ஆக. 5 -**

**மண் காக்க, மக்கள் மானம் காக்க உயர்நீத்த தீரன் சின்னமலை நினைவைப் போற்றுவோம் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!

ஓடாநிலையில் கோட்டைக் கட்டி ஆண்டு தன் வீரத்தாலும் தியாகத்தாலும் கோடானு கோடி மக்கள் மனதில் நிலைத்திருக்கும் மாவீரர் தீரன் சின்னமலையின் நினைவு நாள் இன்று.

அடிமைத்தனமே தோல்விக்கான தொடக்கப்புள்ளி என ஆதிக்கத்துக்கு அடிபணிய மறுத்து அந்நிய படையை விரட்டியடித்த தன்னிகரில்லா வீரத்துக்குச் சொந்தக்காரர்.

மண் காக்க, மக்கள் மானம் காக்க போரிட்டு உயிர்நீத்த தீரன் சின்னமலை நினைவைப் போற்றுவோம்.

அவர் வழியில் தமிழ் மண்ணில் ஆதிக்கத்தை அடிமைத்தனத்தை வீழ்த்துவோம்!

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# விவசாயிகளுக்கு நிஜ பட்ஜெட்டை அளித்து அள்ளிக் கொடுத்தோம்!

## ஒகேனக்கல்லில் – ஆடிப் பெருக்கு விழாவில் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

தருமபுரி, ஆக. 5 -

ஒகேனக்கல்லில் ஆடி பெருக்கு விழாவை - தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார்.

தருமபுரி மாவட்ட சுற்றுலாத் துறை சார்பில் ஒகேனக்கல்லில் மூன்று நாள் நடைபெறும் ஆடிபெருக்கு விழாவின் முதல் நாளில் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.



இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசியதாவது: -

எடப்பாடி பழனிசாமி சுந்தரா ட்ராவல்ஸ் பேருந்தில் பயணம் செய்கிறார். அது ஒரு காமெடி பீஸ், மேலும் அன்புமணி உரிமை மீட்போம் என சொல்கிறார். எந்த உரிமையை மீட்க போகிறார் என்று தெரியவில்லை. அது ஜி.கே.மணிக்கு தான் தெரியும். எதை மீட்க போராடுகிறார் என்று, என்னத்த செஞ்சிங்க என்று கேட்டு கொண்டே இருக்கிறார். எவன் செய்தாலும், நாங்க தான் செய்தோம், நாங்க தான் செய்தோம் என்று சொல்வதை தவிர வேறு எதையும் அவர்கள் செய்ததில்லை. இட ஒதுக்கீடு கேட்பதோடு சரி, ஆனால் இன்றைய தினம் அதற்கான சட்டத்தை கொண்டு வந்தது தி.மு.க. தான்.

பா.ம.க. நிழல் பட்ஜெட் போட்டார்கள், நாங்கள் நிஜ பட்ஜெட்டை போட்டு ஆட்சி நடத்தினோம்.

விவசாயிகளுக்கு நலத் திட்டங்களை அள்ளி கொடுத்தோம். இவர்கள் இட ஒதுக்கீடுகள் கேட்டு போராட்டம் நடத்தி, பேருந்தை நிறுத்தினார் கள்.

மரத்தை வெட்டினார்கள். ஆனால் அப்போதைய அ.தி.மு.க. ஆட்சியில் எம்.ஜி.ஆர். அதை யெல்லாம் கண்டு கொள்ளவில்லை. துப்பாக்கி சூடு நடத்தியதில் 21 பேர் உயிரிழந்தனர். ஆனால் யாரும் கேள்வி கேட்கவே இல்லை. தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ராமதாஸ், வீர பாண்டியாரை அழைத்து பேசி வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்தார்.

என்னவோ தெரியவில்லை. இப்போது அன்புமணி மக்கள் உரிமையை மீட்க போகிறேன் என்று சொல்கிறார். என்ன உரிமையை மீட்க போகிறார் அப்பாவிடம் உரிமையை கேட்க போகிறாரா?

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி, எம்.எல்.ஏ ஜி.கே.மணி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ். மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, கோட்டாச்சியர் காயத்ரி, முன்னாள் எம்.எல்.ஏ மற்றும் முன்னாள் மாவட்ட செயலாளர்கள், தடங்கம். சுப்ரமணி, பி.என்.பி.இன்ப சேகரன், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழகத்தினர், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. முன்னிலை! தஞ்சாவூர் மாவட்டத்தில்

# மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் - பணிநியமன ஆணைகள்!

## அமைச்சர்கள் முனைவர் கோவி.செழியன் – சி.வி.கணேசன் வழங்கினர்!

தஞ்சாவூர், ஆக.5 –

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், ஆடுதுறை அருகே திருமங்கலக்குடி அஸ்சலாம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.

இந்த மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த 3,489 மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் 103 க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் மூலம் 601 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அமைச்சர் பெருமக்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள். மேலும் இரண்டாம் கட்ட தேர்விற்கு 314 நபர்களும், திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு 32 நபர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பின்னர் உயர் கல்வி துறை அமைச்சர முனைவர் கோவி.செழியன் தெரிவித்ததாவது : –

முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் உயர்கல்வித்துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இதன் மூலம் ஆண்டு தோறும் உயர் கல்வி பெறும் நபர்களின் எண்ணிக்கை மென்மேலும் உயர்ந்து வருகிறது.

உயர்கல்வி பெற்ற நபர்கள் அனைவருக்கும் அவர்களின் கல்வி நிலைக்கு ஏற்ப வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திட வேண்டும் என்ற அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க தமிழகம் முழுவதும் தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன இதன் மூலம் லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர். இதற்கெல்லாம் காரணமாக அமைவது தமிழக அரசு இளைஞர்களுக்கு தரமான உயர் கல்வி வழங்கி வருவது ஆகும்.

மேலும் காவிரி டெல்டா மாவட்டம் என அழைக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம் தற்பொழுது உயர் கல்வி மாவட்டம் என்று அழைக்கப்படும் வகையில் திருவிடைமருதூரில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், கும்பகோணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் பல்கலைக்கழகமும் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது ஆகும்.

எனவே இளைஞர்கள் அனைவரும் உயர் கல்வி பெறுவதோடு தமிழக அரசால் நடத்தப்படும் தனியார் வேலைவாய்ப்பு முகாம் மூலமாக உங்களின் தகுதிக்கேற்ப வேலை வாய்ப்பை பெற்று சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என உயர் கல்வி துறை அமைச்சர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் தெரிவித்ததாவது: –

முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் வேலை வாய்ப்பின்மை என்ற நிலையை அடியோடு நீக்கிடும் வகையில் அனைவருக்கும் அவர்களின் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதன் அடிப்படையில் தமிழக முழுவதும் நடத்தப்பட்ட 329 மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாம்கள் மூலமாக 2,65,000 தனியார் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் முதலமைச்சர் அவர்களால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் சுமார் 40 லட்சம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன தமிழ்நாட்டு இளைஞர்கள் அனைவரும் உயர் கல்வி பெறுவதோடு இது போன்று தமிழக அரசால் நடத்தப்படும் தனியார் வேலை வாய்ப்பு முகாம் மூலமாக தங்களது தகுதிக்கு ஏற்ப சிறப்பான வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டு தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயர் சுப.தமிழழகன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ்.விஜயன், மண்டல இணை இயக்குனர் (வேலைவாய்ப்பு) இரா.அருணகிரி, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மைய உதவி இயக்குனர் கா.பரமேஸ்வரி, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் த.அனிதா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம், பனமரத்துப்பட்டி ஒன்றியம் நாழிகல்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க, முன்னாள் கவுன்சிலர் சபரிநாதன் தலைமையில்100 க்கும் மேற்பட்டோர் அ.தி.மு.க.விலிருந்து விலகி கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ்குமார், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் டாக்டர் தருண், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர் உமா சங்கர், பொதுக்குழு உறுப்பினர் சந்திரமோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.